DINAMALAR 11 JULY 2023 PAGE 5

# கால்பந்து பயிற்சியாளர்களுக்கான கோச்சிங் கோர்ஸ்

## புதுச்சேரி பல்கலையில் துவக்கம்

**புதுச்சேரி, ஜூலை 11–** கால்பந்து பயிற்சியாளர்களுக்கான 'டி' லைசென்ஸ் கோச்சிங் கோர்ஸ் புதுச்சேரி பல்கலை வளாகத்தில் நேற்று துவங்கியது.

இந்தியாவில் கால்பந்து விளையாட்டு மெல்ல பிரபலமடைந்து வருகிறது. தேசிய, மாநில கால்பந்து அணிகளுக்கு பயிற்சியாளர்கள் தேவைப்படுகின்றனர். அதற்கேற்ப, அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பும், நாட்டில் திறமையான மற்றும் அங்கீகாரம் பெற்ற கால்பந்து பயிற்சியாளர்களை உருவாக்க லைசென்ஸ் கோச்சிங் கோர்ஸ்களை நடத்தி வருகிறது.

கால்பந்து அணிக்கு பயிற்சியாளராக மாற ஏ,பி,சி,டி லைசென்ஸ் கோச்சிங் கோர்ஸ்கள் முடித்திருப்பது அவசியம். குறுகிய கால (5 நாள்) 'டி' லைசென்ஸ் கோர்ஸ் முடித்தால் பல்கலை, கல்லூரி மற்றும் பள்ளி கால்பந்து அணிக்கு பயிற்சியாளராக சேர முடியும்.

இந்த 'டி' லைசன்ஸ் கோச்சிங் கோர்ஸ் முடிக்க அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு சார்பில் அண்மையில் ஆர்வம் உள்ள விளையாட்டு வீரர்கள், உடற்கல்வி முடித்தவர்களிடம் 'ஆன்லைனில்' விண்ணப்பங்கள் பெறப்பட்டன. நாடு முழுவதிலும் இருந்து 48 பேர் விண்ணப்பித்திருந்தனர்.



புதுச்சேரி பல்கலையில் கால்பந்து பயிற்சியாளர்களுக்கான 'டி' லைசென்ஸ் கோச்சிங் கோர்ஸ் துவக்க விழாவில், புதுச்சேரி கால்பந்து சங்க தலைவர் நெஸ்தருக்கு, கலாசார பிரிவு சிறப்பு பணி அலுவலர் ராஜிவ் ஜெயின் நினைவு பரிசு வழங்கினார். அருகில் பல்கலை கல்வி பிரிவு இயக்குநர் தரணிக்கரசு, உடற்கல்வி துறை தலைவர் வசந்தி.

இவர்களுக்கான 'டி' லைசன்ஸ் கோர்ஸ், ஜூலை 10ம் தேதி முதல் 20ம் தேதி வரை, புதுச்சேரி பல்கலையில், அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு, புதுச்சேரி கால்பந்து சங்கம் சார்பில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் துவக்க விழா நேற்று நடந்தது. பல்கலைக்கழக கல்வி பிரிவு இயக்குநர் தரணிகரசு, கலாசார பிரிவு சிறப்பு பணி அலுவலர் ராஜிவ் ஜெயின் ஆகியோர் முகாமை துவக்கி வைத்தனர். டீன் கிளமண்ட் லூர்து வாழ்த்தி பேசினார்.

நிகழ்ச்சியில் புதுச்சேரி பல்கலைக்கழக துறை தலைவர் வசந்தி, பேராசிரியர் பிரவீன், புதுச்சேரி கால்பந்து சங்க தலைவர் நெஸ்தர், செயலாளர் தனசேகரன், ஒருங்கிணைப்பாளர் நாராயண மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வரும் 14ம் தேதி வரை நடக்கும் முதல் பேட்ஜ் பயிற்சியாளர் தேர்வு முகாமில், பயிற்சி கல்வியாளர் பிபிதாமஸ், உதவி பயிற்சி கல்வியாளர் சுமன் பயிற்சி அளிக்கின்றனர்.

வரும் 16ம் தேதி முதல் 20ம் தேதி வரை 2ம் கட்ட பயிற்சியாளர் தேர்வு நடக்கிறது. இறுதியாக தேர்வு செய்யப்படும் பயிற்சியாளர்களுக்கு 'டி' லைசென்ஸ் சான்றிதழ் வழங்கப்படும். இதன் மூலம் இவர்கள் அனைத்து பள்ளிகள், கல்விக்கூடங்கள், லீக்குகளில் பயிற்சியாளராக பணிபுரிய அனுமதிக்கப்படுவர்.

### 25 ஆயிரம் கால்பந்து பயிற்சியாளர்கள்

பயிற்சி கல்வியாளர் பிபிதாமஸ் கூறுகையில், 'இந்தியாவில் கால்பந்து விளையாட்டை வலுப்படுத்த அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக, 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களை கண்டறிந்து திறமையான கால்பந்து வீரர்களை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

இதற்கு திறமையான பயிற்சியாளர்களை தேர்வு செய்வது முக்கியம்.

அதற்கு 'டி'–உரிமம் பெற்ற பயிற்சியாளர் பணி மகத்தானதாக இருக்கும்.வரும் 2047 ம் ஆண்டிற்குள் 25 ஆயிரம் கால்பந்து பயிற்சியாளர்களை உருவாக்க உள்ளோம்.

ஒவ்வொரு பயிற்சியாளரும் 100 சிறுவர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம், இந்தியாவில் கால்பந்து விளையாட்டிற்கு திறமையான வீரர்கள் அடையாளம் காணப்படுவர்' என்றார்.

### இதுவே முதல் முறை

புதுச்சேரி கால்பந்து அணி சங்க செயலாளர் தனசேகரன் கூறுகையில், 'ஏற்கனவே சிறுவர்களுக்கு பயிற்சி அளிக்க 'இ' உரிமம் வழங்கப்பட்டு வந்தது.

இந்தாண்டு முதல் இதற்கான பாடத்திட்டங்கள் 'சி' உரிமத்தில் சேர்க்கப்பட்டு, 'இ' உரிமம் கைவிடப்பட்டு விட்டது.

அதன்படி 'இ'–உரிமம் 'டி' உரிமத்துடன் இணைத்த பிறகு நாட்டில் நடக்கும் முதல் பயிற்சியாளர் தேர்வு இதுவாகும்.

இதில், எழுத்து தேர்வு, வைவா ஏதும் இல்லை. கால்பந்து பயிற்சியாளர்கள் கற்றுக் கொடுக்கும் அடிப்படை பயிற்சி முறைகள், அவர்கள் எழுப்பும் சிக்கலான பிரச்னைகளை, கையாள்வதை மதிப்பிட்டு 'டி'– உரிமம் வழங்கப்படும்' என்றார்.

THE HINDU

11 JULY 2023

PAGE 2

Tuesday, July 11, 2023
CHENNAI

# Experts stress role of statistical analysis in nation-building




Pondicherry University Vice-Chancellor Gurmeet Singh addressing the 17th National Statistics Day. SPECIAL ARRANGEMENT

**The Hindu Bureau**
PUDUCHERRY

The role of statistical analysis in serving as the bedrock of policy formulation and nation-building was stressed by experts at a seminar recently held at Pondicherry University.

Addressing the 17th National Statistics Day hosted by the Department of Statistics, Pondicherry University, Sajjansingh R Chavan, Director, Directorate of Census Operations, Tamil Nadu and Puducherry, Ministry of Home Affairs, underscored the importance of statistical tools and techniques in the current technology era.

Mr. Chavan, along with Pondicherry University Vice-Chancellor Gurmeet Singh, unveiled the name boards of the seminar hall and statistical laboratory of the department named after eminent statisticians and Padma Vibhushan awardees P.C. Mahalanobis and C. R. Rao.

In his presidential address, the Vice-Chancellor emphasised the need, relevance, and importance of statistics in nation-building and sustaining the heritage of the country.

Proper utilisation and statistical analysis of data will help the country develop in all spheres of activity, he said.

Manish Anand, Joint Director, National Statistical Office, Bardhaman, West Bengal, shared insights into the job opportunities available in Indian Statistical Service.

Kiruthika, professor and head, department of statistics; P. Tirupathi Rao, dean, Ramanujan School of Mathematical Sciences; Sudesh Pundir and J. Prabhakara Naik, Associate Professors, also spoke on the occasion.

DINAMALAR

11 JULY 2023

PAGE 4

# சமுதாய கல்லூரியில் விண்ணப்பிக்க 17ம் தேதிவரை காலக்கெடு நீட்டிப்பு

**புதுச்சேரி, ஜூலை 11–** பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் விண்ணப்பிக்க வரும் 17 ம் தேதிவரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

லாஸ்பேட்டையில் உள்ள புதுச்சேரி மத்திய பல்கலையின் ன் சமுதாய கல்லூரியில் இந்த கல்வி ஆண்டிற்கான இளங்கலை, முதுநிலை, பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு ஜூன் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை சமுதாய கல்லூரி இணையதளமான http://pucc.edu.in மூலம் விண்ணப்பம் பெறப்பட்டது.

இந்நிலையில், மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, விண்ணப்பிப்பதற்கான காலக்கெடுவை வரும் 17 ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் இளநிலை கணினி பயன்பாடுகள், வணிக நிர்வாகம், உயிர்வேதியியல், ஊடகவியல், வணிகவியல், உடற்கல்வியியல், இளங்கலை மருத்துவ தொழில்நுட்ப படிப்புகளான இருதய பரிசோதனை தொழில்நுட்பம், கதிர்வீச்சு மற்றும் நிழற்பட தொழில்நுட்பம், கண்பார்வை தொடர்பான மருத்துவ தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் சேவை தொழில்நுட்பம், கணினி மென்பொருள் மேம்பாட்டு தொழில்நுட்பம் போன்ற படிப்புகளும், மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம், மருத்துவ மனை செவிலியர், சுகாதார ஆய்வாளர், நோய் தொற்று அறிவியல், பத்திர எழுத்தர், யோகா, நாடகக்கலை, திரைப்பட நடிப்புக்கலை, இந்திய இசைக்கலை, கர்நாடக இசை, பரதநாட்டியம், வரைகலை, ஓவியக்கலை, நுண்கலை உள்ளிட்ட ஒரு வருட பட்டயம் மற்றும் 6 மாத சான்றிதழ் படிப்புகளும் உள்ளன.

இந்த படிப்புகளில் சேர்வதற்கு பிளஸ்2 வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முதுநிலை பட்டயப் படிப்புகளில் சேர்வதற்கு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

DINAKARAN
11 JULY 2023
PAGE 14

புதுவை மத்திய பல்கலைக்கழக

# சமுதாய கல்லூரியில் மாணவர் சேர்க்கை 17ம் தேதி வரை நீட்டிப்பு

**புதுச்சேரி, ஜூலை 11:** புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி முதல்வர் (பொறுப்பு) லலிதா ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: லாஸ்பேட்டையில் உள்ள புதுவை மத்தியப்பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரியில் 2023-24ம் கல்வி ஆண்டிற்க்கான இளங்கலை, முதுநிலைபட்டயம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் கடந்த ஜூன் மாதம் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை சமுதாயக் கல்லூரியின் இணையத்தளமான *http://pucc.edu.in* மூலம் விண்ணப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிந்தது. மாணவர் சேர்க்கைக்கான நேர்காணல் வருகிற ஜூலை மாதம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மாணவர்களின் கோரிக்கையை ஏற்று வருகிற 17ம் தேதி வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் இளங்கலை கணினி பயன்பாடுகள், வணிக நிர்வாகம், உயிர் வேதியியல், ஊடகவியல், வணிகவியல், உடற்கல்வியியல் மற்றும் இளங்கலை மருத்துவத் தொழில் நுட்பப் படிப்புகளான இருதய பரிசோதனை தொழில்நுட்பம், கதிர்வீச்சு மற்றும் நிழற்பட தொழில்நுட்பம், கண் பார்வை தொடர்பான மருத்துவத் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் சேவைத்தொழில்நுட்பம், கணினி மென்பொருள் மேம்பாட்டுத் தொழில்நுட்பம் போன்ற படிப்புகளும், மருத்துவ ஆய்வகத் தொழில்நுட்பம், மருத்துவமனை செவிலியர், சுகாதார ஆய்வாளர், நோய்த் தொற்று அறிவியல், பத்திர எழுத்தர், யோகா, நாடகக்கலை, திரைப்பட நடிப்புக்கலை, இந்திய இசைக்கலை, கர்நாடக இசை (பாட்டு), பரதநாட்டியக் கலை, வரைகலை, ஓவியக்கலை, நுண்கலை மற்றும் நிகழ்த்துக்கலை ஆசிரியர் பயிற்சி, ஹிந்தி, பிரெஞ்சு, சமஸ்கிருதம், ஆங்கிலம், ஜோதிடவியல், தோட்டக்கலை, ஆடை அலங்கார வடிவமைப்பு, இயற்கை அழகு சாதனக்கலை, உடற்பயிற்சி மேலாண்மை, ஆயுர்வேத உணவுகள் மற்றும் ஊட்டச்சத்து, இயற்கை மருத்துவம் மற்றும் யோக அறிவியல் போன்றவற்றில் ஒரு வருடப்பட்டயம் மற்றும் ஆறுமாதம் சான்றிதழ் படிப்புகளும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் சேர்வதற்கு 12ம் வகுப்பில் தேர்ச்சியும், முதுநிலைப் பட்டயப்படிப்புகளில் சேர்வதற்கு இளங்கலைப் பட்டப்படிப்பில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். மேலும் விவரங்கள் அறிவதற்கு லாஸ்பேட்டையில் உள்ள புதுவைப் பல்கலைக்கழக சமுதாயக்கல்லூரியில் செயல்படும் மாணவர் சேர்க்கை உதவி மையத்தை நேரடியாக தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DAILY THANTHI

Date: 11.07.2023 Page no: 09

### பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில்

# மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க காலநீட்டிப்பு

## 17-ந்தேதி வரை வாய்ப்பு

புதுச்சேரி, ஜூலை.11-

புதுவை பல்கலைக்கழகத்தின்கீழ் லாஸ்பேட்டையில் செயல்படும் சமுதாய கல்லூரியின் முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

லாஸ்பேட்டை சமுதாய கல்லூரியில் 2023-24ம் கல்வி ஆண்டிற்கான இளங்கலை, முதுநிலை பட்டயம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு கடந்த மாதம் 1-ந்தேதி முதல் 30-ந்தேதி வரை சமுதாயக்கல்லூரியின் இணையத்தளத்தில் (https://pucc.edu.in) விண்ணப்பங்கள் பெறப்பட்டு வந்தன. விண்ணப்பங்களை பெறுவதற்கான கடைசி தேதி கடந்த மாதம் 30-ந்தேதியோடு முடிவடைந்த நிலையில் பெரும்பாலான மாணவர்களின் கோரிக்கையை ஏற்று வருகிற 17-ந்தேதி வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

புதுவை பல்கலைக்கழக சமுதாயக்கல்லூரியில் இளங்கலை கணினி பயன்பாடுகள், வணிக நிர்வாகம், உயிர்வேதியியல், வணிகவியல், உடற்கல்வியியல் மற்றும் இளங்கலை மருத்துவ தொழில்நுட்ப படிப்புகளான இருதய பரிசோதனை தொழில்நுட்பம் போன்ற படிப்புகளும், மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம், மருத்துவமனை செவிலியர், சுகாதார ஆய்வாளர், நோய்த்தொற்று அறிவியல், பத்திர எழுத்தர், யோகா, நாடகக்கலை, திரைப்பட நடிப்புக்கலை என பல்வேறு படிப்புகளில் ஒரு வருட பட்டயம் மற்றும் 6 மாத சான்றிதழ் படிப்புகள் உள்ளன.

இளங்கலை பட்டப்படிப்புகள், பட்டய படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகளில் சேருவதற்கு 12-ம் வகுப்பில் தேர்ச்சியும், முதுநிலை பட்டய படிப்புகளில் சேருவதற்கு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சியும் பெற்றிருக்கவேண்டும். மேலும் விவரங்களுக்கு கல்லூரியில் செயல்படும் மாணவர் சேர்க்கை உதவி மையத்தை நேரடியாக தொடர்புகொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

MALAI MALAR

PAGE NO: 02

DATE: 11.07.2023

# சமுதாய கல்லூரியில் விண்ணப்பிக்க காலக்கெடு நீட்டிப்பு

புதுச்சேரி, ஜூலை 11-
புதுவை லாஸ்பேட்டையில் மத்திய பல்கலைக் கழகத்தின் சமுதாய கல்லூரி உள்ளது.

இங்கு இளங்கலை, முதுநிலை, பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு ஜூன் 30-ம் தேதி வரை விண்ணப்பம் பெறப்பட்டது.

மாணவர்களின் கோரிக்கையை ஏற்று வரும் 17-ம் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது. கல்லூரியில் உள்ள படிப்புகளில் சேர பிளஸ்-2 வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முதநிலை பட்டயபடிப்பில் சேர இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். புதுவை பல்கலைக்கழக இணையதளம் மூலம் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.